# திருவருகைக்காலம் 4 ஆம் வாரம்

*திருவழிப்பாட்டு ஆண்டு* B *(21-12-2014)*

### *திருப்பலி முன்னுரை*

திருவருகைக்காலம் **4 ஆம் வார** திருப்பலி வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் இறைமக்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்று வாழ்த்துகிறேன். மனிதத்தை மீட்டு, மீண்டும் இறைமக்கள் என்ற நிழலுக்கு உயர்த்திட, மானுடம் தேடி வந்த இறைவன் வரும்காலம் அண்மித்துள்ள நிலையில், நாம் அவர் வருகையை, தரும் மீட்பை, எதிர்நோக்கி நம் மீட்பின் பாறையாம் ஆண்டவரின் திருப்பாதத்தில் ஒன்று கூடியுள்ளோம்.

இறைவனின் திட்டங்கள் வியப்புக்குரியவை, மனித அறிவுக்கும், சிந்தனைக்கும் அப்பாற்பட்டவை. அவை நன்மையானவை, நமது எதிர்கால வாழ்வின் வளமைக்கான திட்டங்களானவை. இறைவாக்கினர் வழியாக இறைவன் வெளிப்படுத்தும் நற்செய்திக்கு ஏற்ப நாம் வாழ அவரே நம்மை உறுதிப்படுத்துகின்றார். தாம் அழைத்தவர்களோடு என்றும் உடனிருந்து அவர்களை வழி நடாத்துகின்றார் என்னும் செய்திகளை இன்றைய இறைவார்த்தைகள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன. நாம் ஒவ்வொருவரும் அன்னை மரியாளைப் போன்று: இறைவன் நம்மை சிறப்பான பணிகளுக்கு அழைக்கும்போதெல்லாம் நாம் அவரில் விசுவாசம் கொண்டு: இறைவா நான் உமது அடிமை, நீர் விரும்புவதை நிறைவேற்ற இதோ வருகின்றேன் என்னும் பதிலோடு அவருக்கு ஏற்புடைய வாழ்வு வாழ வரம் கேட்டு இத்திருப்பலியில் பங்கேற்போம்.

www.tamilcatholicnews.com

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**தேர்ந்து கொண்டவனோடு உடன்படிக்கை செய்து கொள்ளும் தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவரும் தாங்கள் உமது அடிமை, நீர் விரும்புவதை நிறைவேற்றுவதே தங்கள் பணி என்பதை ஆழமாக உணரவும், நீர் அவர்களுக்கு வழங்கிய பணியை எச் சூழ்நிலையிலும் மனவுறுதியோடு நிறைவேற்றவும் அவர்களுக்கு தேவையான ஞானத்தை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தூயவரான தந்தையே!**

உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள், எப்பொழுதும், எல்லாச் சூழ்நிலையிலும்: நாங்கள் அனைவரும் உமது அடிமை, நீர் விரும்புவதை நிறைவேற்றுவதே எங்கள் பணி என்பதை ஆழமாக உணரவும், நீர் எங்களுக்கு வழங்கிய பணியை எச் சூழ்நிலையிலும் மனவுறுதியோடு நிறைவேற்றவும் தேவையான ஞானத்தை அளித்துக் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பேருவகை அளிப்பவராம் இறைவா,**

உம் திருமகனின் பிறப்பு விழாவை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கும் உலக மக்கள் அனைவரும், தங்கள் மனமாற்றத்தின் வழியாக புதுவாழ்வு காணவும், பிறர் நலனுக்காக தங்களை அர்ப்பணிப்பதில் மகிழ்ச்சி அடையவும் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**பேரன்பின் ஊற்றாம் இறைவா,**

கிறிஸ்து பிறப்பு விழாவுக்காக தயாராகி வரும் எங்கள் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவரும் உமது பகிர்தலையும், உம் திருமகனின் தியாகத்தையும் உணர்ந்து தூய வாழ்வு வாழ வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அரும்பெரும் செயல்கள் புரியும் வல்லவராம் தந்தையே இறைவா!**

உலக நாடுகளில் பெருகிவரும் பிரிவினைகளும், ஆணவமும், தன்னலமும், ஊழல்களும் ஒழிந்து மக்கள் அனைவரும் அமைதியோடும், பாதுகாப்போடும், மகிழ்ச்சியோடும் வாழ அருள் கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையின் தேவா!**

எம் பங்கிலுள்ள இளைஞர்கள் இளம் பெண்கள் அனைவரும் தங்கள் வாழ்நாளை வீணடித்து விடாமல், எதிர்கால வாழ்வை திட்டமிட்டு செயல்படுத்திட தேவையான அருளைத்தர இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நோயாளரின் ஆரோக்கியமே இறைவா!**

உலக நாடு முழுவதும் பரவிவரும் பல்வேறுபட்ட கொடிய நோய்கள் இல்லாதொழியவும், இயற்கையாகவும், மனிதராலும் உருவாக்கப்படும் எல்லா அழிவுகளும் இல்லாது போகவும்: மக்கள் அனைவரும் உம்முடைய குரலுக்கே செவிகொடுத்து, உம்மைப் பின்பற்றி வாழவும் அருள் கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நோயாளரின் ஆரோக்கியமே இறைவா!**

இன்றைய நாட்களிலே குடும்பத்தின் புனிதத் தன்மைக்கும் , உறவுக்கும், ஒற்றுமைக்கும் எதிராக இருக்கும் எல்லாச் சக்திகளையும் முறியடித்து: குடும்பங்களிலே அன்பும், ஒற்றுமையும், தோழமையும், புரிந்துணர்வும் நிலைபெற்று: குடும்பங்கள் திருக்குடும்பத்தின் தன்மைகளைக் கொண்டு வாழ அருளாசீர் அளித்திடவேண்டுமென்றும்: பிரிந்திருக்கும் குடும்பங்களை ஒன்று சேர்த்திடவேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.